6591

AL/2023(2024)/25/T-I

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2023(2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2023(2024)
General Certificate of Education (Adv. Level) Examination, 2023(2024)

ශ්‍රී ලංකා ඉතිහාසය I (I කොටස)
இலங்கை வரலாறு I (பகுதி I)
History of Sri Lanka I (Part I)

25 T I

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

இலங்கை வரலாறு - ஆதிகாலம் முதல் கி.பி. **1978** வரை

சுட்டெண் : ..................................

**அறிவுறுத்தல்கள் :**

※ இவ்வினாத்தாள் பகுதி **I**, பகுதி **II** ஆகிய இரண்டு பகுதிகளைக் கொண்டது.

※ பகுதி **I** இல் **1** - **40** வரையான எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கமைய விடைகளை எழுதுக.

※ பகுதி **I** இல் ஒவ்வொரு சரியான விடைக்கும் ஒரு புள்ளி வீதம் உரித்தாகும்.

※ இரண்டு பகுதிகளுக்கும் வழங்கப்பட்டுள்ள நேரம் மூன்று மணித்தியாலங்களாகும். விடைகளை எழுதி முடித்த பின்னர், பகுதி **I** இற்கான விடைத்தாள்களை பகுதி **II** இற்கான விடைத்தாள்களுடன் இணைத்துக் கையளிக்குக.

## பகுதி I

● **1** தொடக்கம் **10** வரையிலுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து பெயர்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று மட்டும் ஏதோவொரு காரணத்தினால் ஏனைய பெயர்களுடன் பொருந்தாது உள்ளது. அந்தப் பொருந்தாத பெயரை இனங்கண்டு, அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.

**1.** (1) தொறவக்க (2) குருவிற்ற (3) பம்பரகல (4) பொத்தான (5) பிதுரங்கல (……)

**2.** (1) மகாவம்சம் (2) தீபவம்சம் (3) தூபவம்சம் (4) தாதுவம்சம் (5) கலிங்கு வம்சம் (……)

**3.** (1) உபோசதகர (2) சூதிகர (3) பிரதிமாகர (4) போதிகர (5) ஜன்தாகர (……)

**4.** (1) நான்காம் உதய (2) முதலாம் விக்கிரமபாகு (3) இராணி லீலாவதி (4) இரண்டாம் விஜயபாகு (5) இராணி கல்யாணவதி (……)

**5.** (1) கிரா சந்தேசய (2) பரவி சந்தேசய (3) திஸர சந்தேசய (4) சலலிஹிணி சந்தேசய (5) கோகில சந்தேசய (……)

**6.** (1) ஜெரொனிமோ த அஸவிடோ
(2) பெரொ லோபெஸ் த சூசா
(3) பிலிப் த ஒலிவேரா
(4) கொன்ஸ்தாந்தினொ த சா த நொறொன்ஞா
(5) தியோகு த மோலோ த கஸ்ரோ (……)

**7.** (1) படஹெல பத்த (2) கின்னர பத்த (3) குருவே பத்த (4) மடிகே பத்த (5) மரால பத்த (……)

[பக். 2 ஐப் பார்க்க

8. (1) முல்லேரியா போர் (2) தந்துரே போர் (3) கட்டுவன போர்
(4) பலன போர் (5) ரன்தெனிவெல போர் (……)

9. (1) ஜேம்ஸ் டெயிலர் (2) ஜோர்ஜ் டேனர் (3) எமர்சன் ரெனன்ற்
(4) எச் எவ் கொட்றிங்டன் (5) எச் சி பி பெல் (……)

10. (1) கோல்புறூக் - கமரன் (2) ரிடில் (3) குறா மக்கலம்
(4) டொனமூர் (5) சோல்பரி (……)

● **11** தொடக்கம் **15** வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து சோடிச் சொற்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடியிலுள்ள பெயர்கள் ஒன்றுடன் ஒன்று பொருந்தவில்லை. பொருந்தாத அச்சோடியை இனங்கண்டு, அதன் இலக்கத்தை எதிரேயுள்ள அடைப்புக்குறிக்குள் எழுதுக.

11. (1) வம்சத்தப்பகாசினி - மகாவம்சத்துக்கு எழுதப்பட்ட தீகா
(2) தீபவம்சம் - நாட்டின் முதலாவது வம்சகதை
(3) சரசோதிமாலை - யாழ்ப்பாண இராச்சிய வரலாறு அடங்கிய நூல்
(4) நிகாய சங்கிரக - சாசன வரலாறு அடங்கிய நூல்
(5) பாரச காவிய - கண்டி காலத்தில் எழுதப்பட்ட காவிய நூல் (……)

12. (1) தர்மபால - டொன் ஜுவான்
(2) நிக்கபிட்டிய பண்டார - டொன் மனுவேல்
(3) யமசிங்க பண்டார - டொன் பிலிப்
(4) கோனப்பு பண்டார - ஒஸ்ரியாவின் டொன் ஜுவான்
(5) குசுமாசன தேவி - தோனா கதரினா (……)

13. (1) சில்வத் சமாகம - வெலிவிற்ற சரணங்கர தேரர்
(2) பரம விஞ்ஞானார்த்த சங்கம் - அநகாரிக தர்மபால
(3) இரத்மலானை பரமதம்ப சேதிய பிரிவேனா - வலானே சித்தார்த்த தேரர்
(4) வித்தியோதய பிரிவேனா - ஹிக்கடுவே சுமங்கல தேரர்
(5) வித்தியாலங்கார பிரிவேனா - இரத்மலானை தர்மாராம தேரர் (……)

14. (1) தேயிலை ஆராய்ச்சி நிலையம் - தலவாக்கலை
(2) தெங்கு ஆராய்ச்சி நிலையம் - லுணுவில
(3) இறப்பர் ஆராய்ச்சி நிலையம் - அகலவத்தை
(4) கறுவா ஆராய்ச்சி நிலையம் - பலபிட்டிய
(5) சிறகுஅவரை ஆராய்ச்சி நிலையம் - பல்லேகல (……)

15. (1) ஏ. எவ். மொலமுரே - முதல் சபாநாயகர்
(2) டி. எஸ். சேனாநாயக - முதல் பிரதம மந்திரி
(3) என். எம். பெரேரா - முதல் எதிர்க்கட்சித் தலைவர்
(4) ரி. பி. ஜயதிலக - முதல் சபைத் தலைவர்
(5) ஜே. ஆர். ஜயவர்தன - முதல் விவசாய அமைச்சர் (……)

● **16** தொடக்கம் **20** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் சில பெயர்கள் / கூற்றுகள் / திகதிகளின் தொகுதிகள் **X, Y** என்னும் நிரல்களில் தரப்பட்டுள்ளன. **Y** நிரலில் தரப்பட்டுள்ள பெயர்கள் / கூற்றுகள் / திகதிகள் **X** நிரலில் தரப்பட்டுள்ளவற்றுடன் ஏதோ ஒரு வகையில் தொடர்புபட்டவை. ஆனால் அவை சரியான தொடரொழுங்கில் தரப்படவில்லை. **Y** நிரலில் உள்ளவற்றை **X** நிரலில் உள்ளவற்றுக்கேற்ப சரியாக ஒழுங்குபடுத்தும்போது கீழே தரப்பட்டுள்ள ஐந்து சேர்மானங்களுள் **ஒன்று** சரியானதாகும். சரியான சேர்மானத்தின் இலக்கத்தைத் தெரிவுசெய்து அடைப்புக்குறிக்குள் எழுதுக.

16.

| | X | | Y |
|---|---|---|---|
| (i) | பண்டுவாசதேவ | A | லீலாவதி |
| (ii) | கவந்தீசன் | B | சோமாதேவி |
| (iii) | வட்டகாமினி அபய | C | விகாரமகாதேவி |
| (iv) | முதலாம் பராக்கிரமபாகு | D | பத்தகச்சானா |
| (v) | நிஸ்ஸங்க மல்லன் | E | கல்யாணவதி |

(1) DABCE (2) DBCAE (3) DCABE (4) DCBAE (5) DCEAB (……)

[பக். 3 ஐப் பார்க்க

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාළ ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki



17.

| | X | | Y |
|---|---|---|---|
| (i) | எலஹர அணைக்கட்டு | A | களு கங்கை |
| (ii) | மினிப்பே அணைக்கட்டு | B | அம்பன் கங்கை |
| (iii) | ஹுத்தொட்ட அணைக்கட்டு | C | தெதுறு ஓயா |
| (iv) | டன்கட்டி அணைக்கட்டு | D | மகாவலி கங்கை |
| (v) | கொட்டபத்த அணைக்கட்டு | E | வளவ கங்கை |

(1) BADCE (2) BCADE (3) BDACE (4) BDAEC (5) BECDA (……)

18.

| | X | | Y |
|---|---|---|---|
| (i) | சூரதிஸ்ஸ | A | சேனன், குத்திகன் |
| (ii) | வங்கநாசிக திஸ்ஸ | B | ஸ்ரீ மாற ஸ்ரீ வல்லபன் |
| (iii) | முதலாம் சேனன் | C | மாகன் |
| (iv) | பராக்கிரம பாண்டியன் | D | சந்திரபானு |
| (v) | இரண்டாம் பராக்கிரமபாகு | E | கரிகால சோழன் |

(1) AEBCD (2) AECBD (3) ACBDE (4) ADBCE (5) DEABC (……)

19.

| | X | | Y |
|---|---|---|---|
| (i) | ஹென்றி வோட் | A | கலாவாவி |
| (ii) | வில்லியம் கிரகரி | B | திஸ்ஸமகாராம வாவி |
| (iii) | ஆர்தர் கோர்டன் | C | நாச்சதுவ வாவி |
| (iv) | ஹெர்கியூலிஸ் ரொபின்சன் | D | இறக்காமம் வாவி |
| (v) | வெஸ்ட் றிஜ்வே | E | கந்தளாய் குளம் |

(1) DABCE (2) DBCAE (3) DCABE (4) DCEAB (5) DEABC (……)

20.

| | X | | Y |
|---|---|---|---|
| (i) | கண்டி இராச்சியத்தின் முதல் ஆட்சியாளன் | A | பிரடெரிக் நோர்த் |
| (ii) | முதலாவது ஒல்லாந்த ஆளுநர் | B | சேனாசம்மத விக்கிரமபாகு |
| (iii) | முதலாவது பிரித்தானிய ஆளுநர் | C | வில்லியம் கொபல்லாவ |
| (iv) | முதலாவது ஆளுநர் நாயகம் | D | ஹென்றி மொங்க் மேசன் மூவர் |
| (v) | முதலாவது ஜனாதிபதி | E | வில்லியம் ஜே. கொஸ்டர் |

(1) BADCE (2) BDECA (3) BEADC (4) BACDE (5) BCADE (……)

● **21** தொடக்கம் **25** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஒரு தலைப்பின் கீழ் **ஐந்து** விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒன்று உரிய தலைப்பிற்குப் பொருந்தாதுள்ளது.** அதனைத் தெரிவுசெய்து அதன் **இலக்கத்தை** எதிரேயுள்ள **அடைப்புக் குறியினுள்** எழுதுக.

**21. உருகுணை இராச்சியம்**
(1) மகாநாக மன்னன் மாகம தொடக்கம் உருகுணை வரை ஆட்சி செய்தான்
(2) மகாநாக மன்னனின் பின்னர் யட்டாலதிஸ்ஸ உருகுணையின் ஆட்சியாளன் ஆனான்.
(3) கதிர்காமத்தில் இருந்த பத்து சகோதரர்கள் கோதாபயவினால் கொல்லப்பட்டார்கள்.
(4) களனிதிஸ்ஸ மன்னன் உருகுணை இராசதானியில் இருந்த வலிமையான ஆட்சியாளன் ஆவான்.
(5) கவந்தீச மன்னன் சேரு மற்றும் சோம இராச்சியங்களை உருகுணையுடன் இணைத்துக் கொண்டான். (……)

**22. சீகிரியா**
(1) சீகிரியா முதலாம் காசியப்ப மன்னனின் ஆட்சி மையமாக இருந்தது.
(2) ஆலகமான்தாவில் இருந்த குபேரனைப்போல காசியப்ப மன்னன் சீகிரியாவில் வசித்து வந்ததாகக் கூறப்படுகின்றது.
(3) சீகிரியா ஓவியங்களில் தேவலோகப் பெண்கள் வெளிப்படுத்தப்படுகின்றனர் என்பது ஆனந்த குமாரசுவாமியின் கருத்தாகும்.
(4) முதலாம் முகல்லானன் தனது ஆட்சி மையத்தை சீகிரியாவிலிருந்து அனுராதபுரத்துக்கு மாற்றினான்.
(5) சீகிரியாவின் கிறுக்கல் கவிதைகள் எழுதுதல் கி. பி. பத்தாம் நூற்றாண்டின் பின்னர் ஆரம்பமானது. (……)

[பக். 4 ஐப் பார்க்க

**23.** குருணாகல் இராசதானிக் காலம்

(1) தம்பதெனியாவில் இருந்து ஆட்சி மையம் குருணாகலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.
(2) இரண்டாம் புவனேகபாகு மன்னன் குருணாகலைத் தனது தலைநகரமாக ஆக்கிக் கொண்டான்.
(3) குருணாகல் இராச்சியத்தில் இருந்த வலிமை மிக்க ஆட்சியாளனாக நான்காம் பராக்கிரமபாகு மன்னன் கருதப்படுகின்றான்.
(4) நான்காம் பராக்கிரமபாகு மன்னனின் ஆட்சிக் காலத்தின் இறுதிப் பகுதியில் ஏற்பட்ட அரசியல் குழப்பங்கள் பற்றி மெதவல செப்புத் தகட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.
(5) ஜாதக கதை நூல்கள் குருணாகல் காலத்தில் சிங்கள மொழியில் மொழிபெயர்க்கப்பட்டதாகக் கருதப்படுகின்றது. (……)

**24.** 1815 கண்டி உடன்படிக்கை

(1) பிரித்தானிய ஆளுநருக்கும் கண்டிப் பிரதானிகளுக்கும் இடையே ஒப்பமிடப்பட்ட உடன்படிக்கை ஆகும்.
(2) கண்டி மாகாணங்களுக்கு ஆளுநராக ஜோன் டொயிலி நியமிக்கப்பட்டார்.
(3) நாயக்கர் வம்சத்தினருக்கு கண்டி அரசுரிமைக்கு இருந்த உரிமை இரத்துச் செய்யப்பட்டது.
(4) கண்டிப் பிரதானிகள் சிங்களம், தமிழ் (தெலுங்கு) மொழிகள் இரண்டிலும் கையொப்பம் இட்டனர்.
(5) பௌத்த சமயத்தைப் பாதுகாப்பதாக ஆங்கிலேயர் இந்த உடன்படிக்கையில் இணக்கம் தெரிவித்தனர். (……)

**25.** 1978 அரசியல் யாப்பு

(1) நிறைவேற்று ஜனாதிபதி
(2) விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை
(3) இரு சட்டசபை அரசியல் அமைப்பு
(4) பொதுசன அபிப்பிராயம்
(5) குற்றப் பிரேரணை (……)

- **26** தொடக்கம் **30** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் **(A), (B), (C), (D)** என்னும் நான்கு தெரிவுகள் தரப்பட்டுள்ளன. இவற்றுள் **ஒன்று** அல்லது பல சரியான விடையாகும். சரியான விடை அல்லது விடைகளைத் தெரிவுசெய்து,

**(A)** யும் **(B)** யும் மாத்திரம் சரியாயின் …………………………… **1** எனவும்
**(A)** யும் **(C)** யும் மாத்திரம் சரியாயின் …………………………… **2** எனவும்
**(B)** யும் **(C)** யும் மாத்திரம் சரியாயின் …………………………… **3** எனவும்
**(C)** யும் **(D)** யும் மாத்திரம் சரியாயின் …………………………… **4** எனவும்
**வேறு விடைகளின் எண்ணிக்கை அல்லது சேர்மானங்கள் சரியாயின்** ……...... **5** எனவும்
**அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

| அறிவுறுத்தல்களின் சுருக்கம் | | | | |
|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **5** |
| **(A)** யும் **(B)** யும் மாத்திரம் சரி | **(A)** யும் **(C)** யும் மாத்திரம் சரி | **(B)** யும் **(C)** யும் மாத்திரம் சரி | **(C)** யும் **(D)** யும் மாத்திரம் சரி | வேறு விடைகளின் எண்ணிக்கை அல்லது சேர்மானங்கள் சரி |

**26.** முதலாம் பராக்கிரமபாகு மன்னனின் வெளிநாட்டுக் கொள்கை தொடர்பில் பின்வரும் கூற்றுகளில் எது / எவை சரியானது / சரியானவை?

(A) பர்மாவை ஆக்கிரமித்தல்
(B) கம்போடியாவுடன் நட்புறவுத் தொடர்புகளைப் பேணல்
(C) சோழர்களுடன் திருமணத் தொடர்புகளைப் பேணல்
(D) தாய்லாந்திலிருந்து இலங்கைக்கு உபசம்பதாவைக் கொண்டு வருதல் (……)

[பக். 5 ஐப் பார்க்க

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාළ ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki



**27.** யாழ்ப்பாண இராச்சியத்தின் வரலாறு தொடர்பில் பின்வரும் கூற்றுகளில் எது / எவை சரியானது / சரியானவை?
(A) செகராசசேகரன்மாலை நூல் யாழ்ப்பாண இராச்சியம் பற்றிய முக்கிய மூலாதாரம் ஆகும்.
(B) மாகனின் ஆக்கிரமிப்பு யாழ்ப்பாண இராச்சியம் தோன்றுவதற்கான முக்கிய காரணி ஆகும்.
(C) கம்பளை இராச்சியத்துக்கு யாழ்ப்பாண இராச்சியத்தால் வலுவான அச்சுறுத்தல் இருந்தது.
(D) யாழ்ப்பாண ஆட்சியாளன் இலங்கையின் சுல்தான் என இபன் பதூதா குறிப்பிட்டுள்ளார். (……)

**28.** போர்த்துக்கேயரின் சமயக் கொள்கை தொடர்பில் பின்வரும் கூற்றுகளில் எது / எவை சரியானது / சரியானவை?
(A) போர்த்துக்கேயர் கத்தோலிக்க சமயத்தைப் பிரசாரம் செய்தனர்.
(B) ஏழாம் புவனேகபாகுவை கத்தோலிக்க சமயத்துக்கு மாற்றுவதில் போர்த்துக்கேயர் வெற்றி கண்டனர்.
(C) பிரான்ஸிஸ்கன், யேசுசபைக் குருமார்கள் போர்த்துக்கேயரின் சமய நடவடிக்கைகளில் முக்கிய பங்கு வகித்தனர்.
(D) அருட்தந்தை பெனோ டி குவைரோஸ் சமயப் பிரசாரம் செய்வதற்காக இலங்கைக்கு வந்தார். (……)

**29.** ஆறுமுக நாவலர் தொடர்பில் பின்வரும் கூற்றுகளில் எது / எவை சரியானது / சரியானவை?
(A) ஆறுமுக நாவலர், அநகாரிக தர்மபாலாவுடன் நெருக்கமான தொடர்பைக் கொண்டிருந்தார்.
(B) ஆறுமுக நாவலர் மது ஒழிப்பு இயக்கத்தில் முக்கிய செயற்பாட்டாளர் ஆவார்.
(C) ஆறுமுக நாவலர் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இரண்டாம் அரைப் பகுதியில் ஏற்பட்ட இந்துசமய மறுமலர்ச்சி இயக்கத்தின் முன்னோடி ஆவார்.
(D) ஆறுமுக நாவலர் சைவாங்கில வித்தியாசாலையைத் தாபித்தார். (……)

**30.** 1915 சிங்கள - முஸ்லிம் கலவரம் தொடர்பான பின்வரும் கூற்றுகளில் எது / எவை சரியானது / சரியானவை?
(A) ஹஜ்ஜி மரிக்கார் முகாந்திரம் பதவிக்கு நியமிக்கப்பட்டமையே முக்கிய காரணமாகும்.
(B) கம்பளை வல்லஹாகொட தேவாலய பெரஹராவில் ஏற்பட்ட மோதலின் விளைவாக இந்தக் கலவரம் ஆரம்பமானது.
(C) கலவரத்தை அடக்குவதற்கு மார்ஷல் (இராணுவ) சட்டம் விதிக்கப்பட்டது.
(D) ஏ. சீ. லோறி என்பவரே இந்த வழக்கின் நீதிபதி ஆவார். (……)

- **31** தொடக்கம் **35** வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் சரியான விடையைத் தெரிவுசெய்து **அதன் இலக்கத்தை அடைப்புக்குறியினுள்** எழுதுக.

**31.** கந்தளாய்க் குளத்தைக் கட்டியவர் யார்?
(1) இரண்டாம் அக்கபோதி மன்னன் (2) இரண்டாம் ஜேத்ததிஸ்ஸ மன்னன்
(3) இரண்டாம் உபதிஸ்ஸ மன்னன் (4) இரண்டாம் சேன மன்னன்
(5) இரண்டாம் மொகல்லான மன்னன் (……)

**32.** தம்பதெனியா இராசதானியின் முதல் ஆட்சியாளன் யார்?
(1) இரண்டாம் விஜயபாகு மன்னன் (2) இரண்டாம் பராக்கிரமபாகு மன்னன்
(3) மூன்றாம் விஜயபாகு மன்னன் (4) மூன்றாம் பராக்கிரமபாகு மன்னன்
(5) முதலாம் புவனேகபாகு மன்னன் (……)

**33.** ஆங்கில கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியினால் 1762 இல் கண்டி இராச்சியத்துக்கு அனுப்பப்பட்ட தூதுவர் யார்?
(1) ஹியூ போயிட் (2) ஜோன் பைபஸ் (3) றொபேட் அன்ட்ரூஸ்
(4) மக்டொவல் (5) ஜோன் டேவி (……)

**34.** எந்தப் பிரித்தானிய ஆளுநரின் ஆட்சிக் காலத்தில் விவசாயத் திணைக்களம் தாபிக்கப்பட்டது?
(1) ஹென்றி வோட் (2) வில்லியம் கிரகரி (3) ஆதர் கோர்டன்
(4) வெஸ்ற் ரிட்ஜ்வே (5) ஹென்றி மக்கலம் (……)

**35.** அரச பேரவையில் (state council) முதலாவது பெண் பிரதிநிதி யார்?
(1) டொரின் விக்கிரமசிங்க (2) அட்லின் மொலமுரே (3) மேரி ரத்தினம்
(4) குசுமா குணவர்தன (5) விவியன் குணவர்தன (……)

[பக். 6 ஐப் பார்க்க

- **36** தொடக்கம் **40** வரையிலுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் இரண்டு கூற்றுகள் வீதம் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினா தொடர்பாகவும் தரப்பட்டுள்ள கூற்றுச் சோடிக்குக் கீழே உள்ள அட்டவணையில் காணப்படும் **1, 2, 3, 4, 5** என்பவற்றில் மிகவும் பொருத்தமானதைத் தெரிவு செய்து, அதன் **இலக்கத்தை** அடைப்புக்குறிக்குள் எழுதுக.

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| 1 | சரியானது | பிழையானது |
| 2 | சரியானது | சரியானது |
| 3 | பிழையானது | பிழையானது |
| 4 | பிழையானது | சரியானது |
| 5 | சரியானது | சரியானதாக இருப்பதுடன் **முதலாவது** கூற்றை மேலும் விபரிக்கின்றது. |

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று | |
|---|---|---|---|
| **36.** | ஸ்ரீ மேகவர்ணன் மன்னனின் காலத்தில் புனித தந்ததாது இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டது. | பதுளை தூண் கல்வெட்டில் ஹாபிடிகமவில் இருந்த வர்த்தக மையம் பற்றிய விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. | (……) |
| **37.** | முதலாம் பராக்கிரமபாகு மன்னனால் மேற்கொள்ளப்பட்ட சங்க ஒன்றிணைப்பு பற்றி கல் விகாரை கல்வெட்டு விவரிக்கின்றது. | இரண்டாம் பராக்கிரமபாகு மன்னன் முதலாம் பராக்கிரமபாகு மன்னனின் பேரன் ஆவான். | (……) |
| **38.** | போர்த்துக்கேயரால் கண்டி இராச்சியத்துக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இறுதிப் போர் கன்னொறுவ போர் ஆகும். | இரண்டாம் இராஜசிங்க மன்னனின் முக்கிய எதிர்பார்ப்பு போர்த்துக்கேயரை இந்நாட்டிலிருந்து வெளியேற்றுதல் ஆகும். | (……) |
| **39.** | போர்த்துக்கேயரால் இலங்கைக்கு அச்சியந்திரம் அறிமுகம் செய்யப்பட்டது. | அச்சியந்திரத்தின் உதவியினால் போர்த்துக்கேயர் தமது சமயத்தைப் பரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொண்டனர். | (……) |
| **40.** | 1958 ஆம் ஆண்டு நெற் காணிச்சட்டம் நிறைவேற்றப்பட்டது. | 1978 ஆம் ஆண்டு பெருந்தோட்டங்களைத் தேசியமயமாக்கல் ஆரம்பமானது. | (……) |

* *

[பக். 7 ஐப் பார்க்க

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2023(2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2023(2024)
General Certificate of Education (Adv. Level) Examination, 2023(2024)

ශ්‍රී ලංකා ඉතිහාසය I (II කොටස)
இலங்கை வரலாறு I (பகுதி II)
History of Sri Lanka I (Part II)

25 T I

## இலங்கை வரலாறு - ஆதிகாலம் முதல் கி.பி. 1978 வரை

**அறிவுறுத்தல்கள் :**

- ※ நான்கு வினாக்களுக்கு விடையளிக்கப்பட வேண்டும்.
- ※ பகுதி **II** ஆனது **A, B, C** ஆகிய **மூன்று** பகுதிகளைக் கொண்டது.
- ※ பகுதி **A** இன் வினா கட்டாயமானது.
- ※ பகுதி **B, C** ஆகிய ஒவ்வொரு பகுதியிலிருந்தும் ஒரு வினாவையேனும் தெரிவுசெய்து, மேலும் மூன்று வினாக்களுக்கு விடை எழுதுக.

(முதலாம் வினாவுக்கு விடையளிப்பதற்கு இலங்கையின் புறவுருவப்படம் பகுதி **I** உடன் வழங்கப்பட்டுள்ளது.)

### பகுதி A

**1.** உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள புறவுருவப்படத்தில் கீழே தரப்பட்டுள்ள **எல்லா இடங்களையும் குறித்துப் பெயரிடுக.**

(i) சேருவில (ii) மகியங்கனை (iii) மாதோட்டம்
(iv) முல்லைத்தீவு (v) புத்தளம் (vi) களுத்துறை
(vii) ஹுருளு வாவி (viii) ஊராதோட்டை (ix) களனி கங்கை
(x) மல்வத்து ஓயா (xi) மத்திய மகாணம் (xii) நாச்சதுவ வாவி

(சரியாகக் குறித்துப் பெயரிடுவதற்கு **01** புள்ளி வீதம்)

### பகுதி B

**2.** 1815 வரை இலங்கையின் வரலாற்று வளர்ச்சி தொடர்பில் செல்வாக்கு செலுத்திய விதத்தினை பின்வரும் தலைப்புகளின் கீழ் பரிசீலிக்குக.

(i) ஆறுகளும் ஆற்றுப் பள்ளத்தாக்குகளும்
(ii) மத்திய மலைநாடு
(iii) துறைமுகங்கள்

(16 புள்ளிகள்)

**3.** "நீர்ப்பாசன முறை புராதன இலங்கையின் பொருளாதாரத்தின் உயிர்நாடியாக இருந்தது."

(i) அனுராதபுரத்தில் கட்டப்பட்ட முதலாவது குளம் எது? (01 புள்ளி)
(ii) கலாவாவியிலிருந்து திசா வாவிக்கு நீரைக் கொண்டு செல்வதற்குக் கட்டப்பட்ட கால்வாயின் பெயரைக் குறிப்பிடுக. (01 புள்ளி)
(iii) குளத்தின் முக்கிய பகுதிகளை விவரிக்குக. (05 புள்ளிகள்)
(iv) அனுராதபுரக் கால இறுதிவரை நீர்ப்பாசன முறைமையின் படிமுறையான வளர்ச்சியை எடுத்துக்காட்டுக. (09 புள்ளிகள்)

**4.** முதலாம் விஜயபாகு மன்னனின் சாதனைகளைப் பின்வரும் தலைப்புகளில் கலந்துரையாடுக.

(i) உருகுணை தேசத்தின் ஆட்சியாளராகுதல்.
(ii) நாட்டை ஒன்றிணைத்தல்

(16 புள்ளிகள்)

[பக். 8 ஐப் பார்க்க

**5.** பின்வரும் தலைப்புகளில் எவையேனும் **இரண்டின்** வரலாற்று முக்கியத்துவம் பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.

(i) மகிந்த தேரரின் வருகை

(ii) கலிங்க மாகனின் ஆக்கிரமிப்பு

(iii) கம்பளைக் காலத்தில் கலைகளும், கட்டிடக் கலையும்

(iv) ஆறாம் பராக்கிரமபாகு மன்னன்

(08 × 2 = 16 புள்ளிகள்)

## பகுதி C

**6.** இலங்கையின் கரையோரப் பிரதேசங்களில் ஒல்லாந்தரால் பின்பற்றப்பட்ட கொள்கைகளைப் பின்வரும் தலைப்புகளில் மதிப்பிடுக.

(i) நிர்வாகமும் நீதித்துறையும்

(ii) பொருளாதாரம்

(16 புள்ளிகள்)

**7.** "1848 மக்கள் எழுச்சியானது இலங்கையில் பிரித்தானியர் ஆட்சிக்கு எதிராக ஏற்பட்ட வலிமையான போராட்டமாகும்."

(i) 1848 போராட்டம் ஏற்பட்டபோது இலங்கையில் இருந்த பிரித்தானிய ஆளுநரின் பெயரைக் குறிப்பிடுக. (01 புள்ளி)

(ii) அக்காலத்தில் இருந்த குடியேற்ற நாட்டு செயலாளரின் பெயரைக் குறிப்பிடுக. (01 புள்ளி)

(iii) 1848 போராட்டம் ஏற்படுவதற்குக் காரணமான விடயங்களைப் பரிசீலிக்குக. (10 புள்ளிகள்)

(iv) 1848 போராட்டத்தினால் எழுந்த விளைவுகளைச் சுருக்கமாக கலந்துரையாடுக. (04 புள்ளிகள்)

**8.** சோல்பரி அரசியல் யாப்பின் முக்கிய அம்சங்களைப் பரிசீலிக்குக. (16 புள்ளிகள்)

**9.** பின்வரும் தலைப்புகளில் எவையேனும் **இரண்டின்** வரலாற்று முக்கியத்துவம் பற்றி சிறுகுறிப்பு எழுதுக.

(i) முதலாம் விமலதர்ம சூரிய மன்னன்

(ii) ரொபேர்ட் பிரௌண்றிக்

(iii) பொன்னம்பலம் அருணாசலம்

(iv) 1972 அரசியல் யாப்பின் முக்கிய அம்சங்கள்

(08 × 2 = 16 புள்ளிகள்)

* * *

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki



සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]


ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2023 (2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2023 (2024)
General Certificate of Education (Adv. Level) Examination, 2023 (2024)

ශ්‍රී ලංකා ඉතිහාසය I
இலங்கை வரலாறு I
History of Sri Lanka I
**25 T**

ප්‍රශ්න අංකය / வினா இல. / Question No. **1**

විභාග අංකය / சுட்டெண் / Index No. ..............................




වාරෙටම ඕන කරන පොත් එකපාර
ඕඩර් කරලා දැන් ගෙදරටම ගෙන්වා ගන්න

LOL Book Store

# 25% OFF ALL BOOKS

**Including Exercise Books, CR Books, and B5 Books**




ඕනෙම අභ්‍යාස පොතකට 25%ක විශේෂ වට්ටමක්

**ORDER BOOKS FROM LOL BOOKS STORE**

0372060110 **WWW.LOL.LK**

071 777 4440 (WhatsApp)

**Cash On Delivery Available**


ORDER GCE A/L
SHORT NOTES, MODEL,
REVISION BOOKS & PAST
PAPERS IN SINHALA, ENGLISH
& TAMIL MEDIUM
LOL
BOOK
STORE
CASH ON DELIVERY
AND KOKO PAYMENT
AVAILABLE
WHATSAPP – 0717774440
WEBSITE: WWW.LOL.LK
GET READY FOR YOUR A/Ls
WITH LOL BOOK STORE!